# நம்பிக்கையின் ஒளிக்கதிர் இசை நிகழ்ச்சியின் போதான குறிப்புகள்

இலங்கைக்கான சீன தூதுவர், அதிமேதகு திரு.செங் சூயுவான்
2019 ஒக்டோபர் மாதம் 26ம் திகதி, சங்கிரி - லா விடுதி, கொழும்பு

கௌரவ. பிரதமர் ரணில் விக்ரமசிங்க,
கௌரவ. சபாநாயசர் கரு ஜயசூர்ய,
அதிமேதகு. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச,
கௌரவ. சட்டமா அதிபர் தப்புலா டி லிவேரா

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்,

இன்று இரவு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான கருப்பொருள் ''நம்பிக்கையின் ஒளிக்கதிர்'', எனது புரிந்துணர்வினை 3 வெவ்வேறான விதங்களில் உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் அகம் மகிழ்கின்றேன்.

**முதலில், நாட்டை பொறுத்தவரையில் நீதித்துறை மற்றும் '' சட்ட விதிகள்'' என்பன ''நம்பிக்கையின் ஒளிக்கதிர்'' ஆகும்.**

இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் நிறுவப்பட்டதன் 135ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சீன அரசாங்கத்தின் சார்பாக உங்களுக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 135 அண்டுகளில், இலங்கையின் அபிவருத்திக்கான ஒரு அடித்தளத்தை அமைக்கின்ற மற்றும் நாடளாவிய ரீதியில் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றுள்ள சட்டமா அதிபர் திணைக்களமானது நீதித்துறையின் சுதந்திரத்தையும் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூதாயத்தின் துரித வளர்ச்சியுடன் இலங்கை தற்போது புதிய வாய்ப்புகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களமானது, புதிய சகாப்தத்தில் சிறந்ததொரு பங்கை வகிக்கும் என நான் மனதார வாழ்த்துகின்றேன்.

சட்டமா அதிபர் திணைக்களமானது, எமது இரு நாடுகளின் வெவ்வேறு சட்ட கலாச்சாரங்களை இணைக்கும் ஒரு பாலமாக மாறியுள்ளதுடன் வேறுபட்ட சட்ட அமைப்புகளுக்கிடையிலான இடைவெளியை கடப்பதற்கு எமக்கு உறுதுணையாக நின்றதுடன் ஒரே மண்டலம் ஒரே பாதை முனைப்பு கூட்டுறவிற்கு சிறந்த சட்ட சூழலை உருவாக்கியது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**இரண்டாவதாக ''நம்பிக்கையின் ஒளிக்கதிர்'' என்பது சீனா - இலங்கைக்கு இடையிலான தொடர்பு, நட்பு மற்றும் கூட்டுறவு**

சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் சிறந்த உறவினர்கள், சிறந்த நண்பர்கள் மற்றும் சிறந்த பங்குதாரர்கள். வரலாற்றில், எம்மிடையே நட்பு ரீதியான பரிமற்றங்கள் குறிப்பாக அரிசி - இறப்பர் ஒப்பந்தம் காணப்படுவதோடு இவ்விரு நாட்டின் சிறந்த தலைவர்களான

பிரிமியர் சூ - என்லாய் மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்க போன்றோர்க்கிடையில் சிறந்த நட்பு காணப்பட்டது.

தற்போது, சீனா - இலங்கை ஒரே மண்டலம் ஒரே பாதை முனைப்பு கூட்டுறவானது, எமது இருதரப்பு உறவுகளை புதிய நிலைக்கு உயர்த்தியதோடு இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக அம்சங்களை மேம்படுத்தியது. சீனா வெளிநாட்டு முதலீடு, பிராந்தியத்திற்கு வெளியே உள்ள சுற்றுலாப்பயணிகள், பொறியியல் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வெளிநாட்டு உதவி போன்றவற்றின் பாரிய வளமாக மாறியுள்ளது. நுரைச்சோலை அனல்மின் நிலையம், கட்டுநாயக்க விமான நிலைய அதிவேக நெடுஞ்சாலை முதல் தெற்கு புகையிரத நிலையம் வரை: கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குத்துறை,கொழும்பு துறைமுக நகரம் முதல் ஹம்பாந்தோட்ட துறைமுகம் வரையுள்ள அனைத்து பாரிய கருத்திட்டங்களும் எமது கூட்டுமுயற்சியை பிரதிபலிப்பதோடு எம் இரு நாடுகளுக்கும் மற்றும் அதன் மக்களுக்கும் அதிக பயன் தரக்கூடிய ஒரு பொதுவான குறிக்கோளாக உள்ளது.

எம் இரு நாடுகளுக்கிடையிலான கூட்டுறவு மற்றும் நட்புறவானது முன்னரே, இரு – தரப்புக்கள், இரு – தேசங்கள் மற்றும் இரு – சமூகங்களின் ஒருமித்த கருத்தாக மாறியுள்ளதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். சீன- இலங்கை உறவுகளை மேலும் மேம்படுத்தும் கூட்டுறவு மற்றும் நட்புறவாக ‘‘நம்பிக்கையின் ஒளிக்கதிர்’’ விளங்குகின்றது.

**மூன்றாவதாக நமது சிறுவர்களுக்கான அன்பு மற்றும் உதவி அவர்களின் ‘‘நம்பிக்கையின் ஒளிக்கதிர்’’ ஆகும்.**

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர நன்மதிப்பு மற்றும் ஆதரவானது நம் இரு நாட்டு மக்களின் இதயங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மனிதகுலத்திற்காக எதிர்காலத்தில் ஒத்துழைப்புடன் வாழக்கூடிய சமூகத்தை உருவாக்கல் என்பது ஜனாதிபதி ஜி.ஜின்பிங்கின் சிறப்பான முதல்கட்ட செயற்பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும்.

ஏப்ரல் 21 எனும் துன்பகரமான நாளில், நான் விடுமுறையை கழிப்பதற்காக எனது குடும்பத்துடன் சீனாவில் இருந்தேன். நான் அச்செய்தியை கேட்ட போது எனது குடும்பத்தினருடன் முதல் விமானத்தில் கொழும்புக்கு விரைந்தேன். கடமையுணர்வு மற்றும் அன்பு ஆகியன மரண பயம் மற்றும் தீவிரவாதத்திலிருந்து மீண்டெழ உறுதுணையாக இருந்தன. அந்நேரத்தில் தூதரகம் மற்றும் இலங்கையிலுள்ள சீன கம்பனிகள் மற்றும் பிரஜைகளுக்கு எனது தேவை அவசியம் என்பதனையும் இலங்கை அரசாங்கம் மற்றும் அதன் அப்பாவி மக்களுக்கு சீனா அரசாங்கத்தின் தேவை அவசியம் என்பதனையும் எனது மனம் எண்ணியது.

கடந்த ஆறு மாதங்களில், சீனா அனைத்து வகையான அவசர கோரிக்கைகளுக்கும் பதிலளித்ததுடன் ‘சீனா வேகம்’ மற்றும் ‘ சீனா நிர்ணயம்’ என்று அழைக்கப்பட்ட துரிதமான மற்றும் வினைத்திறன் மிக்க பாரிய ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியது. இச்சம்பவம் நிகழ்ந்து ஒரு வாரத்திற்குள், சீனாவின் செஞ்சிலுவை சங்கம் 18 மில்லியனிற்கு அதிகமான பண உதவியை வழங்கியது. இரு வாரத்திற்குள் சீனா 10 பொலிஸ் ஜீப்புக்களை நன்கொடையாக வழங்கியது. கடந்த மாதம் வரை, சீன அரசு ஏற்கனவே இலங்கை

காவல்துறை, பாராளுமன்றம் மற்றும் அரசாங்கத்திற்கு சுமார் 2 பில்லியன் ரூபாய் மதிப்புள்ள அவசர பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது. மறுபுறம், சீனா இலங்கை கடற்படைக்கு ஒரு போர் கப்பலை பரிசளித்ததுடன், சீனா பல்வேறு சிரேஸ்ட அதிகாரிகளை பாதுகாப்பு பயிற்சிக்காக அழைத்தது.

இன்று, நான் பல சிறுவர்களை பார்த்து மகிழ்ச்சியடைகின்ற அதேவேளை கவலையடைகின்றேன். இரு பிள்ளைகளின் பெற்றோராக நானும் எனது மனைவியும் அவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை முழுமையாக புரிந்துக்கொள்கிறோம். தாக்குதலின் பின்னர் நானும் தூதரகத்தின் அனைத்து ஊழியர்களும் நீர்கொழும்பு புனித செபஸ்டியன் தேவாலயத்திற்கு சென்றோம். நாம் பாதிப்புக்குள்ளான சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பார்வையிட்டதோடு அவர்களின் தேவைகளை கேட்டறிந்தோம்.இன்றிரவு, இவ் ஆதரவற்றோரிற்கு உதவுவதற்காக சீன தூதரகம் சார்பாக 10 மில்லியன் ரூபாய் நன்கொடை வழங்கியதில் நான் பெரும் மகிழ்ச்சியோடு பெருமையடைகின்றேன். சீன நிறுவனங்களும் சமூகங்களும் தமது பொறுப்புக்களை மேற்கொள்ளவும், இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட ஆதரவற்றவர்களுக்கான அறக்கட்டளைக்கு தங்கள் பங்களிப்பை செய்யவும் தயாராக உள்ளன. சிறுவர்கள் எமது நிழலினூடாக தமது வாழ்க்கையை கொண்டு செல்ல முடியும் என நாம் நம்புகின்றோம். எமது அன்பும் உதவியும் இக்குழந்தைகளின் ''நம்பிக்கையின் ஒளிக்கதிர்'' ஆக அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கும் என நான் நம்புகிறேன். 1.4 பில்லியன் சீன மக்களும் எந்தவொரு சூழ்நிலையிலும் இலங்கை மக்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

இறுதியாக, நான் கௌரவ சட்டமா அதிபர் லிவேரா மற்றும் அவரது குழுவினரை அவர்களது கனிவான இதயம் மற்றும் கடின உழைப்பை மனதார பாராட்டி நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றிரவு இசை நிகழ்வு இனிதே நடைபெற பிரார்த்திக்கின்றேன்!

இலங்கைக்கு சமாதானமும் சுபீட்சமும் மற்றும் அதன் மக்களுக்கு நல்வாழ்வும் கிடைக்கப்பெற வாழ்த்துகின்றேன்!

சீன-இலங்கை நட்புறவு நீண்ட காலம் வரை தொடரட்டும்!